தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 10, சுபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034

2003 ஏப்ரல் 23, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. அ. அருணாசலம்** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

"கருமஞ் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்திவ் வுலகு."

கடமை தவறாமையிலும், கருணை பொழிவதிலும் முதன்மையாக இருப்போருக்கு இந்த உலகமே உரிமையுடையதாகும்.

1. வினாக்கள் — விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண் 281, திரு. கே.என். இலட்சுமணன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

281—

மதுபானக் கடை

***9790—திரு. கே.என். இலட்சுமணன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தடை செய்யப்பட்ட இடங்களுக்கு அருகே மதுபானக் கடைகள் திறந்துள்ளதை மூடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

[2003 ஏப்ரல் 23

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

உரிமம் பெற்றவர் அனுமதிக்கப்பட்ட பகுதிக்குப் பதிலாக தடை செய்யப்பட்ட பகுதியில் மதுபானக் கடை ஏதேனும் நடத்துவது குறித்து உரிமம் வழங்கும் அதிகாரியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் உரிமம் ரத்து செய்யப்படுவதுடன் அவர் மீது குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கே.என். இலட்சுமணன் இருக்கையில் இல்லை.

வினா எண் 282, திரு. கு. அன்பழகன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

282—

புறவழிச் சாலை

•18567—திரு. கு. அன்பழகன்:

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வத்தலகுண்டு நகருக்குள் நுழையும் சாலை நெருக்கடியாக உள்ளதால் புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள புறவழிச் சாலை அமைக்கும் பணி தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் எந்த திட்டத்திலும் இடம் பெறவில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வத்தலகுண்டுக்கு புறவழிச் சாலை அமைப்பதன் நோக்கம் என்னவென்றால் மதுரையில் இருந்து